<u>அறந்தாங்கி நகராட்சி</u>

<u>நகர்மன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்</u>

**2023–ம் ஆண்டு ஸ்ரீ சோபகிருது வருடம் மார்கழி மாதம் 11ம் தேதி 27.12.2023 புதன் கிழமை காலை11 .00 மணிக்கு நடைபெற உள்ள அவசர கூட்ட பொருள் விபரம்**

| | | |
|---|---|---|
| **பொருள் எண்:1** | அறந்தாங்கி நகராட்சி ஆணையர் அவர்களின் அக்டோபர் மற்றும் நவம்பர் – 2023 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:–** பதிவு செய்யலாம். | **தீர்மான எண்:– 189**<br>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது. |
| **பொருள் எண்:2** | அறந்தாங்கி நகராட்சி பொறியாளர் அவர்களின் அக்டோபர் மற்றும் நவம்பர் –2023 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:–** பதிவு செய்யலாம். | **தீர்மான எண்: 190**<br>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது. |
| **பொருள் எண்:3** | இந்நகராட்சி TN55Z7684 வாகனத்தில் சிறிய பழுதுகளை சரிசெய்ய வேண்டியுள்ளதால் அதனை பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவீனத்தொகை ரூ.40000/– மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலகக் குறிப்பு.**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்<br>3. பணியின் அவசர அவசியம் கருதி முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டமை மன்றம் ஏற்கலாம். | |
| **பொருள் எண்:4** | மாவட்ட ஆட்சித்தலைவர்/பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, புதுக்கோட்டை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். பி/5564/2022 நாள்.01.11.23 ன் படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 22–23 ன் கீழ் அறந்தாங்கி நகர் ஆவுடையார் கோவில் சாலை, அவுலியா நகர் பேருந்து நிறுத்தத்தில் பயணியர் நிழற்குடை அமைத்தல் பணிக்கு ரூ.7.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வரப்பெற்றது, மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | |

<table>
<tr><td></td><td><u>அலுவலக குறிப்பு</u><br>1. மன்றம் பதிவு செய்யலாம்</td><td></td></tr>
<tr><td><u>பொருள் எண்:5</u></td><td>இணைஇயக்குநர், பொது சுகாதாரம், புதுக்கோட்டை அவர்களின் செயல்முறைகள் ந.எண். ஏ7/3513/2021 நாள்.06.03.23 ன் படி SHS– TN– NUHM ன் கீழ் அறந்தாங்கி நகராட்சி எல்.என்.புரம் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிடம் பராமரிப்பு பணிகள் செய்ய ரூ.2.50 லட்சத்திற்கு நிர்வாக அனுமதியுடன் தொகை வரப்பெற்றது, மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு:</u><br>1. மன்றம் பதிவு செய்யலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.</td><td></td></tr>
<tr><td><u>பொருள் எண்:6</u></td><td>இந்நகராட்சியில் பொது நிதி 23–24ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 14.11.2023 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் விலை விகிதம் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு<br><br>
<table>
<tr><td>வ. எ ண்</td><td>பணியின் விபரம்</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம்</td></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">இந்நகராட்சி வார்டு எண் 15 கோட்டை பைப் லைன் ரோட்டில் RCC கல்வெட் கட்டுதல் பணி</td><td>திரு.B.மோகன்ராஜ், ஒப்பந்ததாரர்</td><td>0.01 % குறைவு</td></tr>
<tr><td>திரு.B.சுரேஷ்குமார், ஒப்பந்ததாரர்</td><td>6.77 % அதிகம்</td></tr>
</table>
<br><u>அலுவலகக் குறிப்பு.</u><br>1. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.B.மோகன்ராஜ், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.</td><td></td></tr>
</table>

| | | |
|---|---|---|
| **பொருள் எண்:7** | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிகன் செயல்முறைகள் ந.க.எண். 35132/2022/EA-2 நாள்.06.11.23 ன் படி 15th Finance commission Health Centres 22-23 ன் கீழ் அறந்தாங்கி நகராட்சியில் புதிதாக நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணிக்கு ரூ.120.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வரப்பெற்றது, மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் பதிவு செய்யலாம் | |
| **பொருள் எண்:8** | இந்நகராட்சியில் ஈப்பு வாகனம் டி.என் 55 இசட் 7684 பொலிரோ வாகனம் பழுதுகளை நீக்கம் செய்ய நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று 24.11.2023 அன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும். | |

| வ. எண் | பணியின் விபரம் | NK CAR CARE PATTUKOTTAI ROAD ARANTHANGI | OOM AUTO SPARES ZONE KERAMANGALAM POST ALANGUDI |
|---|---|---|---|
| 1. | இந்நகராட்சியின் ஈப்பு வாகனம் TN55 Z 7684 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்யும் பணி | 39800.00 | 42700.00 |

**அலுவலகக் குறிப்பு.**

1. மேற்படி பணிக்கு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய NK CAR CARE PATTUKOTTAI ROAD ARANTHANGI விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டதை மன்றம் ஏற்கலாம்

| | | |
|---|---|---|
| **பொருள் எண்:9** | அறந்தாங்கி நகராட்சி அரசு மருத்துவமனை வளாகத்தில் DAY-NULM திட்டத்தின் கீழ் நோயாளிகளுடன் வருபவர்களுக்கு தங்கும் வகையில் Shelter கட்டும் பணிக்கும் ரூ.65.00 லட்சம் மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது. முதலில் கட்டிடம் கட்ட தேர்வு செய்யப்பட்ட இடத்திற்கு பதிலாக முதன்மை குடிமை மருத்துவ அலுவலர் மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகளால் வேறு இடம் அடையாளம் காணப்பட்டு மண் | |

பரிசோதனை செய்து அடித்தளம் போடப்பட்டதில் முதலில் வழங்கப்பட்ட வடிவமைப்பிற்கு பதிலாக வேறு இடம் தேர்வு செய்யப்பட்டு பின் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. தற்போது Shelter கட்டும் பணி முழுமையாக முடிக்கபடாமல் மதிப்பீட்டில் இல்லாத வேலைகள்– வயரிங், போர்வெல் அமைத்து தண்ணீர் வசதி செய்து கொடுத்தல், செப்டிக் டேங்க் மற்றும் வடிகால் சேம்பர் தொட்டி கட்டுதல் மேல்மாடி Head room அமைத்தல் போன்ற கூடுதல் பணிகள் செய்ய வேண்டியுள்ளது. இத்திட்டப்பணியின் அவசியம் கருதி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் ஆய்வு கூட்டத்தில் தெரிவித்தவாறு மேற்படி கூடுதல் பணிகளை செய்து முடித்தால்தான் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர இயலும் என்பதால் மேற்படி கூடுதல் பணிகளை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. அதன்படி கூடுதல் பணிகளை செய்ய பொது நிதியிலிருந்து ரூ.22.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது நிதியிலிருந்து மேற்படி செலவீனம் மேற்கொள்ளலாம்.

**<u>பொருள் எண்:10</u>**

இந்நகராட்சியில் அலுவலக பணிக்கு தேவையான கணினி பிரிண்டர் உபகரணங்கள் வாங்கிட நகர்மன்ற தீர்மான எண் 18 நாள்.29.04.2023 படி ரூ.10.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதில் கீழ்கண்ட பொருட்கள் வாங்க 29.11.2023 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மற்றும் அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு.

| Sl.No. | Description of Item | Qty | Rate Quoted by | | |
|---|---|---|---|---|---|
| | | | Future IT solutions, Virudhachalam | Sivajothi Traders, Neyveli | Professional Computers, Neyveli |
| **A.Quotation for Motherboard – RAM- SMPS** | | | | | |
| 1. | Supply and installation of DDR3 supported intel H55 chipset motherboard with LGA 1156 socket support with integrated VGA, Lan and 5.1 HD audio with 1 year onsite warranty (inc GST) | 1 | 2750 | 2800 | 2600 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | Supply and installation 4 GB DDR3 RAM suitable for the above mother board with 1 yr onsite warranty (inc GST) | 1 | 650 | 600 | 550 |
| 3. | Supply and installation of 450W SMPS with 1 year onsite warranty (inc GST) | 1 | 750 | 650 | 600 |
| Total | | | 4150 | 4050 | 3750 |

| Sl.No. | Description of Item | Qty | Rate Quoted by | | |
|---|---|---|---|---|---|
| | | | Future IT solutions, Virudhachalam | Sivajothi Traders, Neyveli | Professional Computers, Neyveli |
| **B.Quotation for Ribbon catridge** | | | | | |
| 1. | Printer Ribbon for T.V.S MSB 450 star dot matrix printer with Ink bank | 1 | 250 | 230 | 220 |

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள A. Quotation for Motherboard – RAM– SMPS – Professional Computers, Neyveli மற்றும் B.Quotation for Ribbon catridge– Professional Computers, Neyveli என்ற நிறுவனங்களின் விலைப்புள்ளிகளை ஏற்கலாம்.

**பொருள் எண்:11**

இந்நகராட்சியில் கல்வி நிதி 23–24ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 28.11.2023 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகிதம் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு

| வ. எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|
| பொது நிதி 23–24 | | | |
| 1. | இந்நகராட்சி கோபாலசமூத்திரம் ICDS பழுது மற்றும் பராமரிப்பு பணி | திரு.B.மோகன்ராஜ், ஒப்பந்ததாரர் | 0.07 % குறைவு |
| | | திரு.B.சுரேஷ்குமார், ஒப்பந்ததாரர் | 2.48 % அதிகம் |

**<u>அலுவலகக் குறிப்பு.</u>**

1. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.B.மோகன்ராஜ், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**<u>பொருள் எண்:12</u>**

இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் (U) 2.0 23–24 ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 29.11.2023 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகிதம் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு

| வ. எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|
| தூய்மை இந்தியா திட்டம் (U) 2.0 23–24 | | | |
| 1. | கழிவு நீர் ஊர்தி கொள்முதல் செய்தல் | ABT Industries limited, Madurai | 0.01 % குறைவு |
| | | ASR Body work, Madurai. | மதிப்பீடு விலை |

**<u>அலுவலகக் குறிப்பு.</u>**

1. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s ABT Industries limited, Madurai என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண்:13**

அறந்தாங்கி நகராட்சியில் அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர் அபிவிருத்தி பணிகள் ரூ.3052.00 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இத்திட்ட மதிப்பீட்டில் 92.85 கி.மீ நீளம் பகிர்மான குழாய் பதிக்கவும் 8.14 கி.மீ நீளம் Feeder main பதிப்பதற்கும் 1.00 கி.மீ நீளம் பம்பிங் மெயின் பதிப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பணிகள் நடைபெறும் பொழுது ஏற்கனவே பழைய பகிர்மான குழாய்கள் உள்ள இடங்களில் புதியதாக 91.40 கி.மீ பகிர்மான குழாய் பதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. தற்போது பகிர்மான குழாய்கள் விடுபட்ட தெருக்கள் மற்றும் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதியில் உள்ள தெருக்களில் பகிர்மான குழாய் அமைப்பதற்கு நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். மேலும் ஆழ்துளை குழாய்களிலிருந்து பம்பிங் மெயின் இணைக்க 200 எம் எம் பம்பிங் மெயின் பதிக்க வேண்டியுள்ளது. மேலும் பகிர்மான குழாய் விடுபட்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்க வேண்டியுள்ளதால் மேற்படி திட்ட மதிப்பீட்டில் உள்ள சேமிப்பு தொகையிலிருந்து கூடுதல் பணிகள் சுமார் 18.00 கி.மீ நீளம் 110 எம் எம் பகிர்மான குழாய் பதிப்பதற்கும் 1000 மீ பம்பிங் மெயின் பதிப்பதற்கும் நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் அவர்கள் ஒப்புதல் பெறுவதற்கு மண்டல செயற்பொறியாளர் மூலமாக கருத்துரு அனுப்பி ஒப்புதல் பெறலாம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்:14**

இந்நகராட்சியில் பொது நிதி 23-24ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 28.11.2023 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகிதம் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு

| வ. எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|
| பொது நிதி 23-24 | | | |
| 1. | இந்நகராட்சி வார்டு எண் 1 புதுக்கோட்டை ரோட்டில் அமைந்துள்ள மாயணத்தில் பழுது மற்றும் பராமரிப்பு பணி | திரு.B.மோகன்ராஜ், ஒப்பந்ததாரர் | 0.05% குறைவு |
| | | திரு.B.சுரேஷ்குமார், ஒப்பந்ததாரர் | 0.57 % அதிகம் |

**அலுவலகக் குறிப்பு.**

1. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.B.மோகன்ராஜ், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

<table>
<tr>
<td><u>பொருள் எண்:15</u></td>
<td>இந்நகராட்சியில் குடிநீர் வடிகால் நிதி 23–24ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 28.11.2023 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகிதம் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு<br>
<table>
<tr><td>வ. எண்</td><td>பணியின் விபரம்</td><td>ஒப்பந்ததாரர் விபரம்</td><td>ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் மதிப்பீட்டைவிட</td></tr>
<tr><td colspan="4">குடிநீர் வடிகால் நிதி 23–24</td></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">குடிநீர் பணிக்கு தேவையான 4 பணியாளர்களை வெளிகொணர்வு முறையில் பணி அமர்த்துதல்</td><td>திரு.B.மோகன்ராஜ், ஒப்பந்ததாரர்</td><td>மதிப்பீட்டு விலைவிகிதம்</td></tr>
<tr><td>திரு.B.சுரேஷ்குமார், ஒப்பந்ததாரர்</td><td>2.06 % அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக் குறிப்பு.</u><br>
1. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.B.மோகன்ராஜ், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td><u>பொருள் எண்:16</u></td>
<td>மாவட்ட ஆட்சித்தலைவர், புதுக்கோட்டை அவர்களின் ஆய்வு கூட்டத்தில் அடர்காடுகள் மரம் வளர்த்தல் திட்டத்தின் கீழ் அறந்தாங்கி நகராட்சியில் 1000 மரக்கன்றுகள் நடுவதற்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி நடப்பட்ட மரங்களை Forest web portal பதிவேற்றம் செய்யவேண்டியுள்ளதால் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.3.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td><u>பொருள் எண்:17</u></td>
<td>அறந்தாங்கி நகராட்சி வார்டு எண் 17 கோட்டை 1ம் வீதி ஒரு வழி சாலையாக பயன்படுத்தப்பட்டு வாகனங்கள் அதிக அளவில் சென்று வருகிறது. பெண்கள் மேல்நிலைப்பள்ளி சந்திப்பு வளைவில் பேருந்துகள் வரும் பொழுது இருசக்கர வாகன ஒட்டிகள் சாலையின் இருபுறமும் பள்ளமாக உள்ளது விபத்துக்கள் நடைபெற வாய்ப்புள்ளது. மேற்படி சாலையில் போக்குவரத்துக்கு இடையூராக உள்ள வடிகாலில் உயரத்தினை உயர்த்தி கட்டி வெட்மிக்ஸ் கொண்டு பாதையினை சரிசெய்ய ஆகும் செலவினம் ரூ.0.20 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.</td>
<td></td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். | |
| **<u>பொருள் எண்:18</u>** | அறந்தாங்கி நகராட்சிக்கு சொந்தமான புதுக்கோட்டை சாலையில் அமைந்துள்ள கலவை உரக்கிடங்கில் Hydraulic Baling machine கொண்டு பிளாஸ்டிக் கழிவுகளை கட்டு (Packing) செய்து சிமெண்ட் தொழிற்சாலைக்கு அனுப்பபடும். தற்போது கலவை உரக்கிடங்கில் திடீரென தீப்பற்றி எறிந்ததால் Hydraulic Baling machine பழுதாகிவிட்டது. மேற்படி இயந்திரத்தை பழுது நீக்கம் செய்ய ஆகும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.2.60 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம் | |
| **<u>பொருள் எண்:19</u>** | இந்நகராட்சி ஸ்கார்பியோ TN55CZ5000 வாகனத்தில் முன்பக்கம் இரண்டு டயர்கள் முழுவதும் தேய்ந்துவிட்டதால் இரண்டு புதிய டயர்கள் வாங்கி மாற்றம் செய்ய ஆகும் உத்தேச செலவீனத்தொகை ரூ.40000/- மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு.</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்<br>3. பணியின் அவசர அவசியம் கருதி முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் ஏற்கலாம். | |
| **<u>பொருள் எண்:20</u>** | இந்நகராட்சியில் SHS-TN-NUHM திட்டத்தின் கீழ்கண்ட பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 06.12.2023 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகிதம் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு | |

<table>
<tr><td></td><td>
<table>
<tr><td>வ. எண்</td><td>பணியின் விபரம்</td><td>ஒப்பந்ததாரர் விபரம்</td><td>ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் மதிப்பீட்டைவிட</td></tr>
<tr><td colspan="4">SHS–TN–NUHM</td></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">அறந்தாங்கி நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிட பராமரிப்பு பணி</td><td>திரு.B.மோகன்ராஜ், ஒப்பந்ததாரர்</td><td>0.09% குறைவு</td></tr>
<tr><td>திரு.B.சுரேஷ்குமார், ஒப்பந்ததாரர்</td><td>2.27 % அதிகம்</td></tr>
</table>
<br>
<u>அலுவலகக் குறிப்பு.</u><br>
1. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.B.மோகன்ராஜ், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
</td><td></td></tr>
<tr><td><u>பொருள் எண்:21</u></td><td>
இந்நகராட்சி TN55AY4797 ஈப்பு வாகனத்தில் பழுதுகளை சரிசெய்ய வேண்டியுள்ளதால் அதனை பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவீனத்தொகை ரூ.40000/– மன்றத்தின் அனுமதிக்கு.<br>
<u>அலுவலகக் குறிப்பு.</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்
</td><td></td></tr>
<tr><td><u>பொருள் எண்:22</u></td><td>
அறந்தாங்கி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு பொது சுகாதாரப்பணிக்கு தேவையான பிளிச்சிங் பவுடர் நீர்த்த சுண்ணாம்பு வெள்ளை பினாயில் இருப்பு குறைவாக உள்ள காரணத்தினால் உடனடியாக வாங்கி வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. உத்தேச செலவீனம் 2.5 லட்சமாகும்.<br>
1. பிளிச்சிங் பவுடர் –1500Kg<br>
2. நீர்த்த சுண்ணாம்பு துாள் – 10,000 Kg<br>
3. வெள்ளை பினாயில் –500 லிட்டர<br>
<u>அலுவலகக் குறிப்பு.</u><br>
1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2.பொது நிதியிலிருந்து மேற்படி செலவீனம் மேற்கொள்ளலாம்.
</td><td></td></tr>
</table>

**பொருள் எண்:23**

அறந்தாங்கி நகராட்சி / பொது சுகாதாரப்பிரிவு – நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் – தஞ்சாவூர் அவர்களின் உத்தரவின்படி மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட சேதங்களை சரிசெய்திட ஒரு துப்புரவு ஆய்வர் ஒரு துப்புரவு பணிமேற்பார்வையாளர் 10 துப்புரவு பணியாளர்களை சென்னைக்கு அனுப்பி வைக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி 12நபர்கள் சென்னைக்கு சென்று பணி முடித்து திரும்பி வர உள்ளதால் அதற்குண்டான போக்குவரத்து செலவினத்தை உடனடியாக வழங்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அதற்கான உத்தேச செலவினம் ரூ.20,000/– ஆகும் .

**அலுவலகக் குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது நிதியிலிருந்து மேற்படி செலவீனம் மேற்கொள்ளலாம்.

**பொருள் எண்:24**

அறந்தாங்கி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு தற்போது நகரில் காய்ச்சல் , டெங்கு காய்ச்சல் வேகமாக பரவி வருவதால் முதிர் கொசுக்களை ஒழிக்க புகை மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது. தற்போது கைவசம் உள்ள இரண்டு Hand Fogging Mechine ஒரு Vechicle Mounted Fogging Mechine அடிக்கடி பழுது ஏற்பட்டு பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது . எனவே அவசரம் அவசியம் கருதி மூன்று Fogging Mechine பழுது நீக்கம் செய்து தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. இதற்கான உத்தேச செலவீனம் ரூ.50,000/– ஆகும் .

**அலுவலகக் குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது நிதியிலிருந்து மேற்படி செலவீனம் மேற்கொள்ளலாம்

**பொருள் எண்:25**

அறந்தாங்கி நகராட்சியில் இந்த வருடம் ஜனவரி முதல் 30.11.2023 வரை பிறப்பு இறப்பு பதிவு செய்யப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

**Birth Details as per Online for the period 01.01.2023 to 30.11.2023.**

| Sl.No | Name of the Municipality | No.of Births from 01.01.2023 to 22.09.2023 | No.of Births Registered | No.of Births not Registered |
|---|---|---|---|---|
| 1. | Aranthangi | 933 | 933 | 0 |

**Death Details as per Online for the period 01.01.2023 to 30.11.2023**

| Sl.No | Name of the Municipality | No.of Deaths from 01.01.2023 to 22.09.2023 | No.of Deaths Registered | No.of Deaths not Registered |
|---|---|---|---|---|
| 1. | Aranthangi | 195 | 195 | 0 |

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்:26**

இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களில் (01.04.2023) முதல் 31.03.2026 வரை மூன்றாண்டுகளுக்கு) பேருந்து நிலைய வளாகத்தில் தொலைக்காட்சிப்பெட்டி வைத்து விளம்பரம் செய்து கொள்ளும் உரிமத்திற்கு ஏழாவது அழைப்பாக 03.11.2023 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி, பொது ஏலம் கோரப்பட்டது. அதன்படி கீழ்கண்டுள்ள குத்தகைதார்ரகளால் ஏலம் கோரப்பட்டது.

| வ. எண் | ஏலதாரர் பெயர் வைப்புத்தொகை செலுத்திய விவரம் (ரூ) | ஏலக்கேள்வி விவரம் (ஆண்டு ஒன்றுக்கு) | ஏலக்கேள்வி விவரம் (ஆண்டு ஒன்றுக்கு) | ஒப்பந்தப்புள்ளி தொகை (ஆண்டு ஒன்றுக்கு) |
|---|---|---|---|---|
| 1. | திரு. A. பாண்டியராஜன் | 1,00,000/– | ரூ.30,000/– | ஒப்பந்தப்புள்ளி அளிக்கவில்லை |
| 2. | திரு. R. தாமஸ் | 1,00,000/– | ரூ.35,000/– | ஒப்பந்தப்புள்ளி அளிக்கவில்லை |

மேற்கண்டவாறு கேட்கப்பட்ட ஏலக்கேள்விகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. மேற்கண்டவாறு கேட்கப்பட்ட ஏலக்கேள்விகளில் திரு. சு. தாமஸ் என்பவர் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியாக ஆண்டு ஒன்றுக்கு கட்டணம் ரூ.35,000/– ஆக கேட்கப்பட்ட ஏலக்கேள்வியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்:6648/2022/அ1)**

| | | |
|---|---|---|
| **<u>பொருள் எண்:27</u>** | இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களில் கீழ் கண்டுள்ள குத்தகை இனங்களுக்கான குத்தகை காலம் (2021–2022 முதல் 2023–2024 வரை ) வரும் 31.03.2024 வுடன் நிறைவடைகிறது.<br>1. சாலையோரங்களில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் வீரமாகாளியம்மன் கோவில் திருவிழாக்காலங்களில் நிறுவப்படும் தற்காலிக கடைகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம<br>2. பேருந்து நிலையத்தில் பராமரிக்கப்படும் சைக்கிள் ஸ்டாண்டில் வாகனங்களுக்கு தினசரி கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.<br>3. பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.<br>4. ஆடுவதை சாலை கட்டணம் வசூல் செய்யும் உரிமம்<br>மேற்கண்ட குத்தகை இனங்களுக்கு 01.04.2024 முதல் 31.03.2027 வரையில் மூன்றாண்டு கால தொகுப்பு அடிப்படையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் ஒப்பந்தப்புள்ளி , பொது ஏல முறையில் ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. புதிய கட்டணம் விகிதங்கள் நிர்ணயம் செய்யப்பட்ட விவரம் மாவட்ட அரசிதழில் வெளியீடு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. ஒப்பந்தப்புள்ளி, பொது ஏல அறிவிப்பு நாளிதழ்களில் விளம்பரம் செய்தல், மாவட்ட அரசிதழ்ல் வெளியீடு செய்தல் குத்தகை தனி நிபந்தனைகள் அடங்கிய புத்தங்கள் அச்சிடுதல் போன்ற செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| **<u>பொருள் எண்:28</u>** | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதி பட்டுக்கோட்டை சாலை, அக்ரஹாரம் தெருவில் நகராட்சியால் கட்டப்பட்ட இருந்த கடைகள் குத்தகை ஏலம், எடுக்கும் பொருட்டு திரு.S. குணசேகரன் என்பவர் இந்நகரட்சியில் வைப்புத்தொகை ரூ.2,00,000/– தேதியில் காசோலை எண்:157461, நாள்:24.01.2018ம் (Cheque Register பக்க எண்:55) செலுத்தியுள்ளார். | |

<table>
<tr><td></td><td>மேற்காணும் பகுதியில் கட்டிடம் கட்டும் பணிகள் 6 வருடங்கள் ஆகியும் பணிகள் நடைப்பெறததால் வைப்புத்தொகை ரூ.2,00,000/– திரும்ப வழங்க கோரியுள்ளார். ஏனவே திரும்ப வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலக்குறிப்பு:</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.</td><td></td></tr>
<tr><td><u>பொருள் எண்:29</u></td><td>இந்நகராட்சியில் 2023–2024ஆம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ்கண்ட பணி மேற்கொள்ள விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.<br><br>
<table>
<tr><td>வ. எண்</td><td>பணியினி விபரம்</td><td>கண்ணன் எலக்ட்ரிகல்ஸ்</td><td>நியூ சபி எலக்ட்ரிகல்ஸ்</td><td>NEW CRESCENT ELECTRICALS</td></tr>
<tr><td>1.</td><td>வார்டு எண்: 14 கோட்டை –2 அகில்கரை மேடு முனிஸ்வரர் கோவில் அருகில் அமைந்துள்ள சிறுமின் விசை பம்பு இயங்கவில்லை புதிய 1 HP மோட்டார் வாங்குவதற்கு</td><td>41577</td><td>44812</td><td>43920</td></tr>
</table>
<br><u>அலுவலக்குறிப்பு:</u><br>1. குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள கண்ணன் எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொருட்கள் வாங்கியதற்கு தொகை வழங்குவதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.</td><td></td></tr>
</table>

**பொருள் எண்:30**

இந்நகராட்சியில் சேமநலநிதி கணக்கில் வட்டி கணக்கிடும் பணி 1994–1995–ம் ஆண்டு முதல் இது நாள் வரை 29 ஆண்டுகளாக வட்டி கணக்கிடாமல் நிலுவையில் உள்ளதால் மேற்படி வட்டி கணக்கிடும் பணியினை சம்மந்தப்பட்ட வட்டி கணக்கிடு செய்யும் நிறுவனத்தின் மூலம் உரிய விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/– மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) 2023–2024 ஆண்டு பொது நிதியிலிருந்த மேற்படி செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்:1489/2022/பி2)

**பொருள் எண்:31**

அறந்தாங்கி நகராட்சியில் சேமநலநிதி வட்டி 1994–1995–ம் ஆண்டு முதல் 2022–2023 வரை 29 ஆண்டுகளுக்கு கணக்கிடும் பணிக்கு 28.11.2023 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை (ஒருவருடத்திற்கு) |
|---|---|---|
| 1. | Vishnu traders. Pudukkottai | ரூ.6,700/– |
| 2. | SVPEnterprises/ Pudukkottai | ரூ.7,500/– |
| 3. | Hari Agencies/ Pudukkottai | ரூ.7,700/– |

**பொருள் எண்:32**

இந்நகராட்சியில் அலுவலக பணிக்கு தேவையான கணினி பிரிண்டர் உபகரணங்கள் வாங்கிட நகர்மன்ற தீர்மான எண் 18 நாள்.29.04.2023 படி ரூ.10.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதில் கீழ்கண்ட பொருட்கள் வாங்க 22.12.2023 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மற்றும் அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு.

| Sl.No. | Description of Item | Qty | Rate Quoted by | | |
|---|---|---|---|---|---|
| | | | MM Office Automation, Salem | Marvel computers & Electronics, Salem | Digital India Solution, Salem |
| 1 | Toner for Ricoh MP 3054sp | 1 | 6000.00 | 6460.00 | 6985.00 |
| | GST @ 18% | | 1080.00 | 1163.00 | 1257.00 |
| Total | | | 7080.00 | 7623.00 | 8242.00 |

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள MM Office Automation, Salem என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

**பொருள் எண்:33**

இந்நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 22-23ன் கீழ்கண்ட பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 22.11.2023 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகிதம் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு.

| வ. எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|
| பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 22-23 | | | |
| 1. | வார்டு எண் 3 அறந்தாங்கி வடகரை முருகன் கோவில் அருகே மின்விளக்கு அமைத்தல் | Glowing sun developers, ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு விலைவிகிதம் |
| | | Creative constructions, ஒப்பந்ததாரர் | 32.81 % அதிகம் |

**அலுவலகக் குறிப்பு.**

1. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Glowing sun developers, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண்:34**

இந்நகராட்சியில் ஸ்கார்பியோ டி.என் 55 சிஇசட் 5000 டயர்கள் மாற்றம் செய்ய நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று 24.11.2023 அன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்க்கும்.

| வ. எண் | பணியின் விபரம் | Qty | KUJAPPA Car Accessories, Pudukkottai | Ks Accessories, Aranthangi | NK Car Accessories, Aranthangi |
|---|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சியின் TN55 சிஇசட் 5000 வாகனத்தில் டயர்கள் மாற்றம் செய்தல் | 2 | 40000.00 | 45000.00 | 48000.00 |

**அலுவலகக் குறிப்பு.**

1. மேற்படி பணிக்கு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய KUJAPPA Car Accessories, Pudukkottai விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண்:35**

அறந்தாங்கி நகராட்சி வார்டு எண் 5,6,7,8 மற்றும் 9 ஆகிய வார்டுகளுக்கு சூரியமூர்த்தி குளம் அருகில் உள்ள ஆழ்குழாய் கிணற்றில் நீர்மூழ்கி மோட்டார் மூலம் NGGO வாட்டர் டேங்கில் குடிநீர் ஏற்றி மேற்படி குறிப்பிட்டு வார்டுகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது அங்கு வசிக்கும் பொதுமக்களுக்கு போதுமான குடிநீர் இல்லாததால் நீரேற்ற நிலையத்தில் புதிதாக 3000 லிட்டர் கொள்ளளவு கொண்ட சின்டெக்ஸ் டேங்க் மற்றும் 2HP மோட்டர், இதர PVC பைப்புகள், வால்வுகள் வாங்கி பொருத்தி விநியோகம் செய்ய ஆகும் செலவினத் தொகை ரூ.2.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் நிதியிலிருந்து மேற்படி செலவீனம் மேற்கொள்ளலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

| | | |
|---|---|---|
| **<u>பொருள் எண்:36</u>** | அறந்தாங்கி நகராட்சி பெரியார் நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி 10இன்ச் ஆழ்துளை குழாய் மண் சரிவு ஏற்பட்டு ஆழ்துளை குழாய் மண் அடைப்பு ஏற்பட்டுள்ளது. மேற்படி ஆழ்துளை குழாய் மோட்டரை வெளியே எடுக்க முயற்சி செய்து எடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில் பைப்புகள் உடைந்த நிலையில் வெளியில் எடுக்கப்பட்டது. மேலும் போர்வெல் மண் சரிவு ஏற்பட்டு பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. குடிநீர் அவசர அவசியம் கருதி 8’ ஆழ்துளை குழாய் அமைக்க வேண்டியுள்ளது. அதற்காக செலவினம் ரூ.30.00 லட்சம் நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். | |
| **<u>பொருள் எண்:37</u>** | அறந்தாங்கி நகராட்சி வார்டு எண்:19ல் இரயில்வே தென்புறத்தில் உள்ள 50 குடியிருப்புகளுக்கு சாலை வசதி குடிநீர் வசதி மின்விளக்கு வசதி அமைத்து தர கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. மேற்படி இடம் இரயில்வே துறைக்கு சொந்தமான இடம் என்பதால் அந்த இடத்தினை நகராட்சிக்கு ஒப்படைக்கும் பட்சத்தில் மேற்கண்டவாறு வசதிகள் செய்து தர இரயில்வே துறைக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் பார்வைக்கு.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br>மேற்படி கோரிக்கையினை மன்றத்தின் பார்வைக்கு | |
| **<u>பொருள் எண்:38</u>** | தமிழக முதலமைச்சர் அவர்களின் " மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் படி அறந்தாங்கி நகராட்சியில் 27 வார்டுகளிலும் பொது மக்களின் அவர் அவர்கள் வார்டுகளுக்கு அருகில் நடத்தப்படுகின்ற திருமண மண்டபங்கள் மற்றும் பள்ளிகளில் நடத்தப்படுகின்ற 7 சிறப்பு மூகாம் இதில் அனைத்து துறை அலுவலர்களும் பொது மக்களுக்கு சேவை செய்யும் நோக்கில் இத்திட்டம் செயல்படுத்துப்படுகின்றது. இதற்கு தேவையான கணினிகள், நெட் வர்க்குகள் மற்றும் ஸ்டேஸ்னரி, டேபுள் நாற்காலி, பிளக்ஸ் போர்டுகள், விளம்பர நோட்டீஸ் மற்றும் வாகனம் கொண்டு விளம்பரம் செய்யப்பட்டது, சிற்றுண்டிகள் ஆகியவை அனைத்து மாவட்ட .ஆட்சித்தலைவர் புதுக்கோட்டை அவர்களின் வழிகாட்டுதலின் படி ஒவ்வொரு திருமண மண்டபத்திலும் மற்றும் பள்ளிகள் நடைபெறும். இதற்கு ஆகும் உத்தேச செலவீனம் ரூ.15.00 லட்சம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு.</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம் | |

| | | |
|---|---|---|
| **பொருள் எண்:39** | அறந்தாங்கி நகராட்சியில் உள்ள 3 நகராட்சி பள்ளிகள் மற்றும் அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் செயல்பட்டு வரும் 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு தமிழக முதலமைச்சர் காலை உணவு திட்டத்தின் கீழ் காலை உணவு வழங்க அரசாணை நிலை எண். 43 மற்றும் 1 சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் (ச,ந,4–1) துறை நாள்.27,07,2022, 13,01,2023 ன்படி உத்திரவிடப்பட்டுள்ளது, மேற்படி அரசாணைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது,<br><br>**அலுவலக் குறிப்பு.**<br>1. மன்றம் பதிவு செய்யலாம்<br>2. மேற்படி அரசாணையில் தெரிவித்துள்ளவாறு மேற்படி காலை உணவை பறிமாறவும் 100 மாணவர்களுக்கு ஒருவல் வீதம், மாணவர்களை அமர்த்தி சாப்பிட்ட பின் தட்டுகளை சேகரிக்கவும் அப்பள்ளியில் பயிலும் மாணவர் தாயார், சுய உதவிக்குழு உறுப்பினர்களை நியமிக்கவும் மேற்படி நியமிக்கப்படுபவர்களுக்கு மதிப்பூதியமாக மாதம் ரூ.1500 /– வீதம் நகராட்சி கல்வி நிதியிலிருந்து வழங்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளதனை ஏற்கலாம். | |

ஒம்/–இரா.ஆனந்த்
தலைவர்,
அறந்தாங்கி நகர்மன்றம்.